**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 95/2014**
**நாள்.06.08.2025**
**வா.சா.1- வெள்ளையம்மாள்**
**க/பெ - சங்கர்**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

17. எனது மாமனார் பொன்னுச்சாமி அம்பலத்தின் தகப்பனார் முனியாண்டி அம்பலம் என்றால் சரிதான்.

18. முனியாண்டி அம்பலத்திற்கு 2 மனைவிகள் என்பது எனக்கு தெரியாது.

19. முனியாண்டி அம்பலத்தின் இரண்டாவது மனைவி மூலம் வீரமலை மற்றும் பொன்னுச்சாமி ஆகியோர் மக்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

20. முனியாண்டிஅம்பலத்தின் மக்கள் வீரமலை அம்பலம், பொன்னுச்சாமி அம்பலம், கருப்பன்அம்பலம் ஆகிய மூவரும் தாவா சொத்தில் சர்வே எண்.1539 ல் உள்ள அவர்களுக்குரிய பாகமான 3 ஏக்கர் 80 செண்டும், வேறு இதர சொத்துக்களும் குமரன் செட்டியார் மகன் கோவிந்தசாமி செட்டியாருக்கு 21.08.1951 ம் தேதியில் ஈடு லாபகடன் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

21. மேற்படி கடனை தீர்க்காததால் அதை தீர்க்க சொல்லி மெய்யன் அம்பலத்திடம் ஒரு ஈடு லாபகடன் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரியல்ல.

22. முனியாண்டி அம்பலத்தின் மகன் பொன்னுச்சாமி அம்பலத்திற்கு பொன்னுச்சாமி அம்பலத்தின் மக்கள் வீரமலை அம்பலம், பெரியசாமி அம்பலம் ஆகியோர் தாவா 2 லக்க சொத்தில் 1 ஏக்கர் 50 செண்டை கிரையம் செய்து கொடுத்துள்ளனர் என்றால் சரிதான்.

23. 4 ஏக்கர் 18 செண்டை 10.07.1953 ம் தேதிய கிரையபத்திரத்தின்படி கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

24. என் கணவரும், என் மாமியார் பாப்பம்மாளும் 06.03.1983 ம் தேதியில் தெய்வானையம்மாளுக்கு ஒரு சீர்திருத்த பத்திரம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

25. அந்த பத்திரத்தை பார்த்தால் அதில் உள்ள கையெழுத்து எனது கணவரின் கையெழுத்து என்று அடையாளம் காட்டமுடியும் என்றால் சரிதான்.

26. சீர்திருத்தபத்திரம் எழுதிக்கொடுத்த விவரம் எனக்கு நன்கு தெரிந்து கொண்டு, அதில் உள்ள விவரங்கள் தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

27. தெய்வானையம்மாளுக்கு கிரையபத்திரப்படியும், சீர்திருத்த பத்திரப்படியும் சர்வே எண்.1539/3ல் செண்ட் 50 ம், சர்வே எண்.1535/Cல் கீழ்புறம் 3 ஏக்கரும் தனித்து பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

28. மேற்படி 3 ஏக்கர் 50 செண்டை தவிர்த்து இதர சொத்துக்களுக்கு இதுவரை பாகவிஸ்தி செய்யவில்லை என்றாலும், பாகவிஸ்தி பத்திரம் ஏற்படுத்திகொள்ளவில்லை என்றாலும் சரிதான்.

29. பாகம் பிரிக்கப்படாத நிலையில் தாவா சொத்து எங்களுக்கு தனித்து பாத்தியப்பட்டதென விளம்புகை பரிகாரம் கோரியும், அதனைத் தொடர்ந்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

PETER B Digitally signed by PETER B

**Principal District Munsif**
**Vedasandur**